தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைகழகம்
நாகப்பட்டினம் - 611 002

தொழில் முனைவோருக்கான ஓர் அரிய வாய்ப்பு

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைகழகம், நாகப்பட்டினம் சார்பாக தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் உதவியோடு "கயலகம்" என்னும் மீன் பொருட்கள் விற்பனை நிலையம் சுமார் 15 லட்சம் மதிப்பீட்டில் (720 சதுர அடியில்) மாதவரம், சென்னையில் அமைந்துள்ளது. "கயலகம்", பொன்னேரியிலுள்ள, டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய நிர்வாகத்தின் வரம்பிற்குட்பட்டது. இக்கல்லூரியின் தொழில் முனைவோருக்கான மீன்பதன தொழிற்நுட்பக் கூடத்தில், மீன்பதன தொழிற் நுட்பத் துறை மூலமாக மீன் பதப்படுத்துதலிலுள்ள தொழில் வாய்ப்புகள் குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கயலகத்தில் மீன் மதிப்பூட்டலுக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் உள்ளன. எனவே "கயலகம்" என்னும் மீன் பொருட்கள் விற்பனை நிலையத்தை பயன்படுத்தி தங்களது வாழ்வாதாரத்தை முன்னேற்ற விரும்பும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் பல்கலைகழகத்தின் இணையதளத்தில் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை மே 20 ஆம் தேதி, 2023 மாலை 5 மணிக்குள் deanfcriponneri@tnfu.ac.in என்ற மின் அஞ்சல் வழியாகவோ அல்லது நேரடியாகவோ, டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பொன்னேரியில் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் விவரங்களுக்கு, இந்த விற்பனை நிலையத்தின் பொறுப்பாளர் முனைவர். நா. முரளிதரன், உதவிப் பேராசிரியரை, 9952231805 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

இங்ஙனம்,

04/05/23

முதல்வர்,
டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
பொன்னேரி - 601204